மாலை நேரக் கல்லூரி வகுப்புகள்.

250—(* வினா எண். 8648) திரு செ. செம்மலை: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாலை நேரக் கல்லூரி வகுப்பு நேரத்தை மாற்றியமைக்க வேண்டி கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலுவலகங்களிலும், அரசுத் துறைகளிலும் பணி புரிபவர்களுக்கு தங்களுடைய கல்வித் தகுதியை உயர்த்திக் கொள்வதற்கு வசதியாகத்தான் இந்த மாலை நேரக் கல்லூரிகள் எல்லாம் ஆரம்பிக்கப்பட்டன. முன்பெல்லாம் அலுவலகங்களின் பணி நேரம் மாலை 5 மணியோடு முடிவடைந்ததால் 5½ அல்லது 6 மணிக்குக் கல்லூரிகளுக்குச் செல்ல அவர்களுக்கு வசதியாக இருந்தது. இப்போது வாரத்திற்கு இரண்டு நாள் விடுமுறையோடு மாலை நேரப்பணிநேரம் 5½ வரை என்று ஆகிவிட்டதால், உரிய நேரத்திலே கல்லூரிகளுக்குச் செல்ல முடிவதில்லை. எனவே இவைகளைக் கருத்தில் கொண்டு, கோரிக்கை வரவில்லை என்று சொன்னாலும் 1 மணி நேரம் தாண்டி அந்த வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாலை 3 மணிக்குப் பிறகு ஆரம்பிக்கும் நிலை இருக்கிறது. வேண்டுமானால் தற்போது மாலை நேர வகுப்புகளில் படிப்பவர்களுடைய கருத்தையும் அறிந்து அவர்களுடைய வசதிக்கு ஏற்ப அது குறித்து என்ன செய்யலாம் என்று அரசு பரிசீலிக்கும்.

உசிலம்பட்டியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

251—(*வினா எண். 9503) திரு. பி.கே.எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் (District Munsiff Court) ஏற்படுத்த அரசு ஏதும் திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்பட உள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1987 ஏப்ரல் 2]

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டே உசிலம்பட்டியில் முன்சிப் கோர்ட் ஆரம்பிக்கப் படும் என்று சொன்னார்கள். எனவே இந்த நிதி ஆண்டிலாவது, நடப்பு ஆண்டிலாவது ஆரம்பிக்க இருக்கும் நீதிமன்றங்களில் ஒன்றாக இதையும் சேர்த்து ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுக்கு தொடர் இனச் செலவு 4 லட்சமும், தொடரா இனச் செலவு 2.13 இலட்சமும் ஆகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இது போன்ற கோரிக்கைகள் பல பகுதிகளில் இருந்தும் வந்திருக்கின்றன. இன்றியமையாத தேவை எது என்பதை உயர்நீதிமன்றத்தோடு கலந்து அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கும் நிலை இருக்கிறது. காரணம் நிதிப் பற்றாக்குறை. நிதி நிலைமைக்கு ஏற்ப அரசு இதைப் பரிசீலிக்கும்.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, நிதி நிலைமைக்கு ஏற்ப எடுத்துக்கொள்வது என்ற முறை மற்ற பகுதிகளைப் பொறுத்தவரையில் இருந்தாலும்கூட பரவாயில்லை. உசிலம்பட்டியைப் பொறுத்தவரையில் பல ஆண்டுகாலமாக இந்தக் கோரிக்கை இருந்து வருகிறது. அங்கு அதிகமான வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. பக்கத்தில் இருக்கிற திண்டுக்கல் பகுதியிலிருந்துகூட வழக்குகளை அங்கே நடத்துகிற சாத்தியக்கூறுகள் இருப்பதால் உசிலம்பட்டியில் அந்த நீதி மன்றத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் சொல்கிறோம். அதை அரசு ஏற்று விரைவில் உசிலம் பட்டியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தை ஏற்படுத்த ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, கொள்கை அளவில் அந்தப் பகுதியில் இருக்கிற தேவையை அரசு உணர்ந்திருக்கிறது. அங்கே நிச்சயம் டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட் வேண்டுமென்பதை அரசு உணர்ந்திருக்கிறது. நிதி நிலைக்கு ஏற்ப கோரிக்கையை ஏற்று விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ச. கோவிந்தசாமி: தலைவர் அவர்களே, சங்ககிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திருச்செங்கோட்டில் நடை பெற்று வருகிறது. அது எப்போது சங்ககிரிக்கு மாற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு கொள்கை அரசிடம் இல்லை. காரணம் ஒரு இடத்தில் இருக்கிற நீதிமன்றத்தை இன்னொரு இடத்திற்கு மாற்றி அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு இன்னலைத்

தருவது அரசினுடைய நோக்கமல்ல. ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதே கேள்வியைக் கேட்டு இதே அவையில் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட் என்ற முறையிலே நீதிமன்றத்தை அமைக்கவேண்டுமென்று அரசு முடிவு செய்து, அதற்கேற்ற நடவடிக்கையை எடுத்து வருகிறது. நிதிநிலைக்கு ஏற்ப எல்லா வட்டத்திற்கும் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட் நீட்டிக்கப்படும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் முதியவர் கல்வி மையம்.

252 (*வினா எண் 9786) திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் முதியவர் கல்வி மையம் எவ்வளவு உள்ளது?

(ஆ) இதன்மூலம் எத்தனை மக்கள் பயன் அடைந்து உள்ளனர்?

(இ) இதற்காக எவ்வளவு தொகை அரசு செலவு செய்து உள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 900 வயது வந்தோர் கல்வி மையங்கள்.

(ஆ) இதுவரை மொத்தம் 1,41,180 பேர் பயனடைந் துள்ளனர். 1986–87-ல் இத்திட்டத்தின் மூலம் 27,391 பேர் பயன் அடைந்து வருகின்றனர்.

(இ) மாநில அரசு ரூ. 17,13,598-ம்

நடுவண் அரசு ரூ. 17,07,917-ம்

ஆக மொத்தம் ரூ. 34,21,515 இத்திட்டத்திற்குச் செலவு செய்யப்பட்டுள்ளது.

திரு. ஜே. முகம்மது கனி: தலைவர் அவர்களே, புதுக் கோட்டை ஒன்றியம் மற்றும் கந்தர்வக்கோட்டை ஒன்றியத்திலே இருக்கிற ஆதிதிராவிட மக்கள் இந்தத் திட்டத்தின் மூலமாகப் பயனடைவதற்கு பல கிராமங்களில் முதியோர் கல்வி மையங்களைக் கேட்கிறார்கள். அந்தக் குறிப்பு அரசிடம் வந்திருக்கிறதா? அப்படியானால் அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே புதுக்கோட்டை மாவட்டம் மட்டுமல்ல, எல்லாப் பகுதிகளிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு தான் இந்தத் திட்டம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. பட்டிதொட்டி களிலும் இந்தத் திட்டம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இது அங்கே நடந்து வருகிறது.